# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்), வெளிச்செல்லும் அனுமதிச்சீட்டு (திருத்தச்) சட்டம்.

---

[1980 சனவரி மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1980, சனவரி மாதம் 11 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

விலை : சதம் 35 | தபாற் செலவு : சதம் 25

# 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்), வெளிச்செல்லும் அனுமதிச்சீட்டு (திருத்தச்) சட்டம்

[1980, சனவரி மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 75/79
1269

## 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்), வெளிச்செல்லும் அனுமதிச்சீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கான ஒரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்), வெளிச்செல்லும் அனுமதிச்சீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்), வெளிச்செல்லும் அனுமதிச்சீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"கடவுச் சீட்டுக்களினதும் அவசர காலச் சான்றிதழ்களினதும் செல்லுபடிக் காலம்.

5. (1) கடவுச்சீட்டு ஒன்றின் செல்லுபடிக்காலம் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலமாதல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி காலத்துக்குக்காலம் அத்தகைய கடவுச்சீட்டின் செல்லுபடியினை ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத மேலும் ஒரு காலப்பகுதிக்குப் புதுப்பிக்கலாம்; ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய கடவுச்சீட்டின் மொத்தச் செல்லுபடிக் காலமானது, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து பத்து ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

(2) அவசரகாலச் சான்றிதழொன்றின் செல்லுபடிக் காலம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி காலத்துக்குக் காலம் அத்தகைய சான்றிதழின் செல்லுபடியினை அத்தகைய சான்றிதழ் காலாவதியாகும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத மேலும் ஒரு காலப் பகுதிக்குப் புதுப்பிக்கலாம்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய கடவுச்சீட்டின் அல்லது அவசரகாலச் சான்றிதழின் அல்லது அவைகளின் புதுப்பித்தலின் செல்லுபடிக் காலத்தை நிர்ணயிக்கையில் ஒவ்வொரு விடயத்தினதும் தேவைப்பாடுகளையும் சூழ்நிலைகளையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.".

2—அ47113—6,700 (01/80)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"கடவுச் சீட்டுக்களையும் இராச தூதுவர்க்கான கடவுச் சீட்டுக்களையும் அவசர காலச் சான்றிதழ்களையும் வழங்குவதற்கும் புதுப்பித்தற்குமான கட்டணங்கள்.

9. (1) கடவுச்சீட்டொன்றை வழங்குவதற்கான கட்டணம் நூறு ரூபாவாதல் வேண்டும். அத்துடன் அதனைப் புதுப்பித்தற்கான கட்டணம் ஆண்டொன்றுக்கு இருபது ரூபாவாதல் வேண்டும்.

(2) இராசதூதுவர்க்கான கடவுச்சீட்டொன்றை வழங்குவதற்கான கட்டணம் நூறு ரூபாவாதல் வேண்டும். அத்துடன் அதனைப் புதுப்பித்தற்கான கட்டணம் ஆண்டொன்றுக்கு இருபது ரூபாவாதல் வேண்டும்.

(3) அவசரகாலச் சான்றிதழொன்றை வழங்குவதற்கான கட்டணம் இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டும். அத்துடன் அதனைப் புதுப்பித்தற்கான கட்டணம் ஆண்டொன்றுக்குப் பத்து ரூபாவாதல் வேண்டும்.

(4) கடவுச்சீட்டொன்றில் மாற்றமொன்றைச் செய்வதற்கான கட்டணம் இருபது ரூபாவாதல் வேண்டும்.

(5) அவசரகாலச் சான்றிதழொன்றில் மாற்றமொன்றைச் செய்வதற்கான கட்டணம் பத்து ரூபாவாதல் வேண்டும்.".

திருத்தங்கள் கடந்தகாலத்தையும் உள்ளடக்கிப் பயனுடையனவாதல்.

4. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலும் 3 ஆம் பிரிவினாலும் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும், 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.